ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# ச. பாலசுந்தரனாரின் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் உரைமறுப்பு நெறியும் உத்தியும்

**நெறியாளர்**
***முனைவர் இரா. இராஜா,***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழாய்வுத்துறை,*
*தேசியக்கல்லூரி (தன்னாட்சி),*
*திருச்சிராப்பள்ளி – 620001.*
*தமிழ்நாடு.*

**ஆய்வாளர்**
***செ. மணிகண்டன்,***
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத்துறை,*
*தேசியக்கல்லூரி (தன்னாட்சி),*
*திருச்சிராப்பள்ளி – 620001.*
*தமிழ்நாடு.*

***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***

## முன்னுரை

*தமிழில் கிடைக்கப்பெற்ற நூல்களுள் முதல் இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியம். இந்நூலிற்கு இளம்பூரணர் உள்ளிட்ட பல்வேறு உரையாசிரியர்கள் உரைவரைந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ச. பாலசுந்தரனார் இந்நூலிற்கு ஆராய்ச்சிக்காண்டிகையுரை வரைந்துள்ளார். இவ்உரையில் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் போன்றோர் உரையாசிரியர்களின் கருத்துக்களை மறுப்பதும் ஏற்பதும் உரைமுழுக்க காணப்பெறுகின்றது. இவ்வாறு ஓர் உரைக் கருத்தை மறுத்து புதிய கருத்துக்களைப் பெய்து உரைப்பது இளம்பூரணர் உரையிலும் அவருக்குப் பின் வந்த பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரைகளில் பரவலாகக் காணப்பெறுகின்றது. அதன் தொடர்ச்சியாகச் ச. பாலசுந்தரனாரின் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் காணலாகும் உரைமறுப்பு நெறிகளையும் உரைமறுப்பு உத்திகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*

## உரைமறுப்பின் தொடக்கம்

*உரைமறுப்பின் வரலாற்றைத் தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களுள் முன்னவராக அறியப்படும் இளம்பூரணரிடமிருந்து தொடங்க வேண்டியிருக்கின்றது. இளம்பூரணர் தம் உரையில்,* ***“ஒருசாராசிரியர் ரூபகம் சொல்லப்பட்டது என்ப உவமைபற்றி வருதலின் இஃது உவமையின் பாகுபாடு என்பது இவ்வாசிரியன் கருத்து” (உவம. 9), “அவற்றைக் குறிலகவற்றூங்கிசை வண்ணம், நெடிலகவற்றூங்கிசை வண்ணம் என***

***ஒருசாராசிரியர் பெயரிட்டு வழங்குப" (செய். 226)*** *என்னும் குறிப்புகள் இளம்பூரணர் தமக்கு முன்பிருந்த தொல்காப்பிய உரையாசிரியர்கள் கருத்தை மறுத்தும் குறிப்பிட்டும் உரைவரைந்திருப்பதைத் தெரிவிக்கின்றன. அவரைத் தொடர்ந்து* ***உரைப்பாருமுளர், என்பாருமுளர் (செய். 1), அவ்வாறு சூத்திரஞ் செய்வது ஆசிரியர் கருத்தன்று (செய். 101), இக்கருத்தறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்தென்ப (மரபு. 93)*** *என்னும் சொற்றொடர்கள் பேராசிரியரிடம் காணப்பட்ட உரைமறுப்பு நெறியைக் குறிக்கின்றன.* ***தொல்லாசிரியர் தமிழ்வழக்கன்றென மறுக்க (அகத். 53), உரைப்போரும் உளர், அவர் அறியாராயினார் (களவு. 7), கூறுவாருமுளர், அவர் அறியார்? (களவு. 10)*** *என்னும் சொற்றொடர்கள் நச்சினார்க்கினியரின் உரைமறுப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. இவ்வாறு இளம்பூரணர் உரையிலும் அவருக்குப் பின்பும் தோன்றிய உரையாசிரியன்மார் உரைகளிலும் உரைமறுப்பின் நீட்சியைக் காணமுடிகின்றது.*

***ச. பாலசுந்தரனாரின் உரையேற்பு நெறிகள்***

*ச. பாலசுந்தரனாரின் உரைமறுப்புக் கருத்துக்களை ஆராய்வதற்கு முன்பு அவரது உரையேற்பு நெறிகளைச் சுட்டிக்காட்ட வேண்டுவது அவசியமாகும். ச. பாலசுந்தரனார் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமைக்கும் பிற உரையாசிரியர்களின் கருத்துக்களை ஏற்கும் இடங்களைப்* ***'பெயர்ச்சுட்டிக் கருத்தேற்றல்'*** *என்னும் அடிப்படையில் குறிப்பிடலாம். இவ்அடிப்படையில்* ***"இளம்பூரணர் கண்ட செம்மையான உரை" (அகத். 54), "நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்குக் கூறும் விளக்கம், பொருந்தாமையைப் பாரதியார் மறுப்புரையான் தெளிக" (புறத். 4), "நச்சினார்க்கினியர் விளக்கம் போற்றற்பாலதாம்" (புறத். 17), "பாரதியார் இவற்றை விழுப்பவகை என ஓர்ந்து விளக்கிய உரைநயம் போற்றத்தக்கது" (புறத். 24), "இளம்பூரணர் பாடமே நூல்நெறிக்கு ஏற்றதாகுமென்க" (புறத். 24), "தகுதிச்சொல் எனவும் விளக்குவார் நச்சினார்க்கினியர். அவ்விளக்கம் ஒக்கும்" (கற்பு.24), "அவர் கருத்து (பேராசிரியர்) ஏற்புடையதே" (மரபு. 13).*** *எனவரும் இடங்கள் பிற உரையாசிரியர்கள் கருத்தைப் பாலசுந்தரனார் பொன்னேபோல் போற்றியுள்ளமையைக் காட்டுவதாய் அமைகின்றன.*

***ச. பாலசுந்தரனாரின் உரைமறுப்புச் சொற்றொடர்கள்***

*ச. பாலசுந்தரனார் தொல்காப்பியப் பொருளதிகாரம் உரைமுழுக்க இருபத்தைந்திற்கும் மேற்பட்ட உரைமறுப்பு சொற்றொடர்களைக் கையாண்டுள்ளார். சான்றிற்குச் சில இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

*இந்நூல்நெறிக்கு இயையாமையை அறியலாம் (அகத். 15), அவர் கருத்து நூல்நெறிக்கு ஏலாமையறியலாம் (புறத். 3), உரையாளர் பலவாக விளக்கங் கூறிச் சென்றனர், அவர் கருத்து ஆராய்தற்குரியதாகும், சிறவாமையறிக, அவர் கருத்து இயையாமை புலனாகும் (புறத். 5), நூல் நெறிக்கு ஒவ்வா விளக்கம் கூறிச் சென்றனர் (களவு. 8), மயங்கவைத்தல், மாறுகொளக்கூறல், குன்றக்கூறல் என்னும் சிதைவின் பாற்படுமென்க (களவு. 10), நூலொடு பொருந்துமாறில்லை, கருத்து ஆராய்தற்குரியதாகும்*

*(கற். 28), உரையாசிரியன்மார் கூறும் விளக்கங்கள் தமிழ்நெறியொடு பொருந்தி வாராமையைத் தேர்ந்து தெளிக (பொருள். 5), நூல்நெறிக்கு ஏலாமையை ஓர்ந்துகொள்க (மெய்ப். 14), அவர் கருத்துச் சொற்பொருளமைதிக்கும் நூல்நெறிக்கும் பொருந்தாமை உணரப்படும், ஏலாமை அறிந்து கொள்க (மெய்ப். 22), அவர் கூறும் காரணம் பொருந்தாமையறியலாம் (உவம. 26), சூத்திர யாப்பு நெறிக்கு ஏற்புடைத்தாகாது (உவம. 29), அவர்தம் கருத்து ஒவ்வுமாறில்லை எனத் தெளிக (செய். 21), உரையாசிரியன்மார் இவ்வடியிலக்கணம் பற்றிக் குழம்பிக் கூறியுள்ளனர் (செய். 32), அவர் கூறும் பொருள் பெரிதும் செயற்கையாக உள்ளமையைக் காணலாம் (செய். 34), அவர்தம் எடுத்துக்காட்டுக்களுள் கூறப்படும் இலக்கணத்திற் பொருந்தாதனவும் உள (செய். 95), அவர் கூறும் கருத்துக்கள் ஒவ்வாதனவாக உள (மரபு. 28), அவர் கருத்து ஏற்குமாறில்லை என்க (மரபு. 71), அவர் கூற்றுக்கள் ஆராய்தற்குரியனவாகும் (மரபு. 93), இயைபில்லாத பல கருத்துக்களை வலிந்து கூறியுள்ளமையை ஓர்ந்து விலக்குக (மரபு. 97), உரையாசிரியன்மார் நூற்கருத்தொடு ஒவ்வாத பல கருத்துக்களைக் கூறிச் சென்றனர் (மரபு. 98).*

**உரைமறுப்பில் இருவகை**

*ச. பாலசுந்தரனாரின் உரைமறுப்பை, 1. பொதுவகை, 2. சிறப்புவகை என இருவகைப்படுத்தலாம். பொதுவகையை, 1. பொதுப்படையாக மறுத்தல், 2. பெயர்சுட்டி மறுத்தல், 3. உரைக்குப் பெயரிட்டு மறுத்தல் என மூன்றாக வகைப்படுத்தலாம். இவற்றுள் பொதுப்படையாக மறுத்தலாவது உரையாசிரியர் பெயர் சுட்டாமல், உரையாளர் பலவாக விளக்கங் கூறிச்சென்றனர் (புறத். 5), என்பார் கருத்துப் பொருந்தாதென்க (புறத். 29), இந்நுண்மை கருதாத உரையாசிரியன்மார் (புறத். 34) எனப் பொதுப்படையாக மறுத்தலாகும்; பெயர்சுட்டி மறுத்தலாவது, உரையாசிரியர்களின் பெயர்களைச் சுட்டி (இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், ச.சோ. பாரதியார், வெள்ளைவாரணனார், மறைமலையடிகள்) மறுப்பதாகும். உரைக்குப் பெயரிட்டு மறுத்தலாவது, உரையாசிரியர்களின் உரைக்கருத்தை வல்லுரை (அகத். 50), வலிந்துரை, ஒவ்வாவுரை (அகத். 38), மயக்கவுரை (உவம. 22) என மறுப்பதாகும்.*

*ச. பாலசுந்தரனாரின் உரைமறுப்பைச் சிறப்புவகையால் 1. நூற்பா வடிவம் மறுத்தல்,*

*2.. பாடம் மறுத்தல் 3. நூற்பா கருத்து மறுத்தல், 4. உரையை மறுத்தல், 5. உட்துறை மறுத்தல், 6. எடுத்துக்காட்டினை மறுத்துல், 7. இலக்கணக் குறிப்பை மறுத்தல், என்னும் எழுவகையாக வகுத்துக்கொள்ளலாம். இவ் எழுவகை உரைமறுப்புக் கூறுகளை உத்தி எனக் கருதுதல் பொருந்தும். எனவே, ச. பாலசுந்தரனாரின் உரைமறுப்பு உத்திகள் ஏழினை இனிவரும் பகுதிகளில் எடுத்துரைக்கின்றன.*

**உரைமறுப்பு உத்திகள்**

**நூற்பா வடிவம் மறுத்தல்**

*சிறப்புத்தன்மையாகச் சுட்டப்பட்ட எழுவகை உரைமறுப்பு உத்திகளுள் நூற்பா வடிவம் மறுப்பு என்பது, ஒரு நூற்பாவை இரண்டாகப் பகுத்தமைப்பதும் இரண்டு நூற்பாக்களை ஒரே நூற்பாவாக அமைத்துக்கொள்வதாகும். இவ்வாறு நூற்பாக்களை பிரித்தும் சேர்த்தும் அமைத்துப் பொருள்கொள்ளும் முறையில் முன்னை உரையாசிரியர்களின் நூற்பா வடிவத்தை மறுப்பதாகக் கொள்ளலாம். இவ்வாறு நூற்பா வடிவத்தை மாற்றி அமைத்துக்கொள்வதன் மூலம் ஒரு நூற்பாவிற்குப் பிறரினும் வேறு விளக்கம் கொடுப்பதை அறியமுடிகிறது. இளம்பூரணர் இரு நூற்பாக்களாக (அகத். 6, 7) விரித்துக் கூறுவதை நச்சினார்க்கினியர் ஒரே நூற்பாவாகக் (அகத். 6) கொள்வார். இளம்பூரணரும்* ***(அகத். 33),*** *நச்சினார்க்கினியரும்* ***(அகத். 31) உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான*** *என்னும் நூற்பாவைத் தனித்துக்கூற, ச. பாலசுந்தரனார்,* ***உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான, வேந்துவினை யியற்கை வேந்தனின் ஒரீஇய, ஏனோர் மருங்கினும் எய்திட னுடைய (அகத். 33)*** *என ஒரே நூற்பாவாகக் கொள்வார். இவ்வாறு நூற்பாவின் வடிவமைப்பை மாற்றுவதன் மூலமாகத் தனது உரைக்கருத்தை நிலைநாட்டிக்கொள்ள உரையாசிரியருக்கு வாய்ப்பமைந்து விடுகிறது எனலாம்.*

***பாடம் மறுத்தல்***

*மூலநூல் ஆசிரியரின் கருத்துக்கொள்கை பாடம் எனக் கருதலாம். உரையாசிரியர்கள் காலத்தில் மூலநூலிற்கும் உரை எழுதப்பட்ட காலத்திற்கும் இடையே ஏற்பட்ட நீண்ட இடைவெளி எது மூலபாடம் என பகுத்தறிதற்கு ஏதுவாக அமையாமல் போயிற்று. இவ்வாறு உரையாசிரியர்களுக்கிடையே காணப்படுகின்ற பல்வேறு பாடங்களை ஆய்வாளர்கள் பாடவேறுபாடு எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். ச. பாலசுந்தரனார் பிற உரையாசிரியர்களைப் பின்பற்றியும் தாம் புதிதாகப் பாடவேறுபாடு படைத்திருப்பதையும் உரைமுழுக்க காணமுடிகின்றது. பிற உரையாசிரியர்களின் பாடத்தை அவர் ஏற்றுக்கொண்டாலும் உரை வேறுபட்டிருப்பதை கருத்தில் கொள்ளவேண்டும். பாலசுந்தரனாரின் பாடம் மறுத்தலுக்கும் பின்பற்றலுக்கும் சிலவற்றைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.*

***அட்டவணை 1 பாலசுந்தரனாரின் பாடவேறுபாடு பின்பற்றல் - மறுத்தல்***

| **இளம்பூரணர்** | **நச்சினார்க்கினியர்** | **பேராசிரியர்** | **பாலசுந்தரனார்** |
|---|---|---|---|
| *உடைத்தே (அகத். 34)* | *உடைத்தே (அகத்.32)* | - | *உடைய (அகத். 33)* |
| *மாபெருந்தானையர் (புறத். 5)* | *மாபெருந்தானையர் (புறத். 5)* | | *மாவருந்தானையர் (புறத். 5)* |
| *புணர்த்தும் (செய். 11)* | *புணர்த்தும் (செய். 12)* | *புணர்ந்தும் (செய்.12)* | *புணர்ந்தும் (செய். 12* |
| *நண்டும் (மரபு.31)* | - | *நண்டும் (மரபு.31)* | *வண்டும் (மரபு.31)* |
| *மாவும் புள்ளும் (மரபு. 32)* | - | *மாவும் மாக்களும் (மரபு. 32)* | *மாவும் புள்ளும் (மரபு. 32)* |

***நூற்பா கருத்தை மறுத்தல் (துறை மறுத்தல்)***

*நூற்பா கருத்தை (துறை) மறுத்தல் என்பது தமக்கு முன்புள்ள உரையாளர்களின் கருத்தை மறுத்துரைப்பதாகும். ஒரு நூற்பா குறிப்பிட்ட ஒரு செய்தியை விளக்குகிறது என குறிப்பிடுவது இதன் தலையாய நோக்கமாகும். இதனை இலக்கிய உரையாளர் துறை எனக் குறிப்பிடுவர். இதன் அடிப்படையிலேயே உரையாசிரியர்களின் உரைவிளக்கம் அமைகின்றது. '**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்' (அகத். 9)** என்னும் நூற்பாவை இளம்பூரணர் மெய்யுறு புணர்ச்சிக்குரியதாகவும், நச்சினார்க்கினியர் இயற்கைப் புணர்ச்சிக்குரியதாகவும் குறிப்பிட ச. பாலசுந்தரனார் இதனைக் **"களவொழுக்கத்திற்கு ஏதுவாகத் தலைமக்களிடத்துக் கிளர்ந்தெழும் உணர்வுகள்" (அகத். 9)** எனக்குறிப்பிட்டு தலைமகனுக்குரிய உணர்வுகள் இவை, தலைமகளுக்குரிய உணர்வுகள் இவை என வகுத்துக் கூறியுள்ளார். **'இருவகைக் குறிபிழைப் பாகிய விடத்தும்" (அகத். 17)** என்னும் நூற்பாக் கருத்தைத் தலைவன் கூற்றாக இளம்பூரணர் குறிப்பிட, நச்சினார்க்கினியர் தலைமகட்குரிய கிளவிகளாக எடுத்துரைக்கின்றார். இவ் இருவர் கருத்துக்களுள் நச்சினார்க்கினியர் கருத்தைப் பின்பற்றி ச. பாலசுந்தரனார் உரை வரைந்துள்ளார். இவ்வாறு நூற்பா கருத்தில் தனித்து நின்றும், யாதேனும் ஓர் உரையாசிரியரைச் சார்ந்தும் உரை வரைவதைக் காணமுடிகின்றது.*

***உரையை மறுத்தல்***

*இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சோமசுந்தரபாரதியார் போன்ற உரையாசிரியர்களின் உரையை முழுவதுமாக மறுத்துரைப்பதை அவர்தம் உரை எடுத்துரைக்கின்றது. மெய்ப்பாட்டியலின் 12 ஆம் நூற்பாவிற்கு உடைமை முதலாக நடுக்கு என்னும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக வரும் முப்பத்திரண்டு பொருள்கள் எண்வகை மெய்ப்பாட்டிற்குரிய பொருள்கள் ஆகும் என்னும் கருத்தின் அடிப்படையில் துறை விளக்கம் கொடுக்கும் ச.பாலசுந்தரனார், **"இனி இளம்பூரணரும் பேராசிரியரும் இக்கூறிய முப்பத்திரண்டினையும் நகை முதலாய எண்வகை மெய்ப்பாடுகட்குரிய பொருளெனக் கருதாமல் இவற்றையே மெய்ப்பாடு என்று கருதி உரைவிளக்கம் செய்து போந்தனர். நாவலர் சோமசுந்தர பாரதியார் இவை முப்பத்திரண்டும் மெய்ப்பாடு போன்று செய்யுட் பொருள் சிறக்க வரும் உணர்வுகள் என்றும் களவிற்குரிய இயற்கைப்புணர்ச்சி முதலிய நான்கற்கும் முறையே எட்டெட்டாக உரிமை பெற்றுவரும் என்றும் வலிந்தும் நலிந்தும் பொருள்கூறிச் சென்றனர்" (மெய்ப். 12)** என்று மூவரையும் மறுத்துரைக்கின்றார். ஓதற்பிரிவுக்குரிய கால எல்லையைக் கூறும் **'வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது" (கற்பு. 47)** என்னும் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் **"துறவறத்தினைக் கூறும் வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக்கடவாது, அக்கல்வியெல்லாம் மூன்றுபதத்தைக் கடவாது என்றவாறு" (கற்பு. 47)** என்று உரை வரைகின்றார். இவ்வுரைக் கருத்திற்குச் ச. பாலசுந்தரனார், **"பொதுக்கல்வியல்லாத***

***சிறப்புக்கல்வியின் பொருட்டுப் பிரியும் ஓதற்பிரிவு மூன்றாண்டுக்கால எல்லையைக் கடவாது”*** *என்றும்* ***“இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரை சமயத்துறை ஒன்றுமே பற்றி நிற்றலின் குன்றக்கூறலாகுமென்க” (கற்பு. 47)*** *என மறுத்துரைப்பதையும் காண முடிகின்றது.*

**உட்துறை மறுத்தல்**

*உட்துறை மறுத்தலாவது, ஒரு நூற்பா ஒரு திணை அல்லது ஒரு கூற்றுப் பற்றிய பல்வேறு துறையை அல்லது பல்வேறு கிளவிகளை உள்ளடக்கியிருக்கும். அவ்வாறு இடம்பெறும் உட்துறைக் கருத்துக்களைச் ச. பாலசுந்தரனார் தழுவியும் மறுத்தும் உரை வரைந்துள்ளார்.* ***“மறைந்தவர் காண்டல்” (களவு. 21)*** *என்னும் நூற்பாவில்* ***“பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி............நாலிரண்டு வகையிற்” (23)*** *என்னும் கிளவிக்கண் இடம்பெற்றுள்ள* ***‘நாலிண்டு வகை’*** *என்பதற்கு இளம்பூரணர் மெய்ப்பாட்டியலின்* ***‘முட்டுவயின் கழறல்’ (மெய். 23)*** *என்னும் நூற்பவில் இடம்பெற்றுள்ள எட்டு கிளவிகளைக் குறித்தது என உரைக்கின்றார். நச்சினார்க்கினியர் தலைவன் கூற்றில் இடம்பெற்றுள்ள* ***“மெய்த்தொட்டுப் பயிறல் முதலாக வல்லே பெற்றுழித் தீராத் தேற்றம்” (களவு. 11)*** *என்னும் எட்டாகச் சுட்டுகின்றார். ச. பாலசுந்தரனார் இவரின் வேறாக நின்று தோழி கூற்றில் இடம்பெற்றுள்ள* ***“நாற்றம் முதலாக பயில்பு“ (களவு. 24)*** *வரையுள்ள எட்டைக் குறித்துள்ளார்.*

**எடுத்துக்காட்டினை மறுத்தல்**

*ச. பாலசுந்தரனார் தம் உரையில் ஆங்காங்கே உரையாசிரியர்கள் தரும் எடுத்துக்காட்டுகளை மறுத்துரைப்பதைக் காணமுடிகின்றது. வெட்சித்திணையின் முதல் துறையாக இடம்பெற்றுள்ள* ***‘படையியங் கரவம்’ (புறத். 3)*** *என்னும் துறைக்கு நச்சினார்க்கினியர் பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டின் 752, 763 ஆம் பாடல்களாக வருகின்ற* ***‘‘வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியாற்“, “அடியதி ரார்ப்பின ராபெயர்த்தற்“*** *என்னும் இரு பாடல்களை எடுத்துக்காட்கின்றார். இவ் எடுத்துக்காட்டுகளை மறுக்கும் ச. பாலசுந்தரனார் புறப்பொருள் வெண்பாமாலையின் இரண்டாம் பாடலாக வருகின்ற* ***“நெடிபடு கானத்து நீள்வேல் மறவர்”*** *என்னும் பாடலை எடுத்துக்காட்டி,* ***“இதற்கு நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டியவை “செலவு“ என்னும் துறைக்குப் பொருந்துதலன்றி அரவத்திற்கேலாமையறிக” (புறத். 3)*** *என மறுத்துள்ளார்.* ***‘அகன்றுபொருள் கிடப்பினும்’ (செய். 209)*** *என்னும் நூற்பாவிற்குப் பேராசிரியர் வரைந்துள்ள உரைபற்றி* ***“இதற்குப் பேராசிரியர் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமுறை பொருள்கோள் என்பதற்கு ஒத்ததாக உள்ளமை காண்க” (செய். 209)*** *என எடுத்துக்காட்டினையும் உரையையும் ஒருசேர மறுப்பதாக உள்ளமை காணமுடிகின்றது.*

**இலக்கணக் குறிப்பை மறுத்தல்**

*உரை முழுமைக்கும் இலக்கணக் குறிப்புகளை ஆராய்ந்தும் விளக்கியும் செல்லும் ச. பாலசுந்தரனார், பிற உரையாசிரியர்கள் தரும் இலக்கணக் குறிப்புகளை மறுத்துரைக்கும்*

*இடங்களையும் காணமுடிகின்றது.* ***'உள்ளுறை யுவமம் ஏனை யுவமமென' (அகத். 48)*** *என்னும் நூற்பாவில் இடம்பெற்றுள்ள* ***'என'*** *என்னும் சொல்லை இளம்பூரணர்* ***'என இருவகையானும்'*** *என்றும், நச்சினார்க்கினியர் '****என்று கூறும்படி****' என்றும் விளக்கம் தந்துள்ளனர். இதனைப் பாலசுந்தரனார்* ***'என' என்பது "கண்ணிமை நெடியென" (எழுத்.7) "என்புழிப் போல எண்ணின்கண் வந்தது"*** *என எண்ணிடைச்சொல்லாகச் சுட்டுவதையும்* ***"உரையாசிரியன்மார் என என்னும் இடைச்சொல்லை எனவென் எச்சமாகவும் உவமச்சொல்லாகவும் கொண்டு இந்நூல் நெறிக்கியையா விளக்கம் கூறிச்சென்றனர்" (அகத். 48)*** *என மறுத்துரைப்பதையும் அறியமுடிகின்றது.*

***உரைமறுப்பில் மதிப்பிடுதலும் - அறிவுறுத்தலும்***

*ச. பாலசுந்தரனார் பிற உரையாசிரியர்களை மறுத்துரைக்கும் இடங்களில் அவ்வுரைக் கருத்துக்களை மதிப்பீட்டுச் சொற்கொண்டு உரை மதிப்பீடு செய்வதைக் காணமுடிகின்றது. உரையை வல்லுரை, வலிந்துரை, ஒவ்வாவுரை, மயக்கவுரை என மதிப்பீடு செய்வது உரைமறுப்பு மதிப்பீட்டின் ஒருநிலை. இம்மதிப்பீடு தவிர ச. பாலசுந்தரனார் வேறுசில உரைமதிப்பீட்டுச் சொற்களையும் தம் உரையில் கையாண்டிருக்கிறார். அவை ஒரு நூலாக்க உத்தியோடு தொடர்புகொண்டன என்றாலும் உரைக்கும் பொருந்தும் என்னும் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.* ***குன்றக்கூறலாகுமென்க (கற்பு. 47), இச்சூத்திரத்திற்கு உரையாசிரியன்மார் கூறும் உரையும் விளக்கமும் இயைபின்றியும் கூறியதுகூறலாயும் உள்ளமை அறிக (பொருள். 7), அங்ஙனங் காட்டுதல் மயங்கவைத்தலாம் என்க (மெய்ப். 12), அங்ஙனமாயின் அது கூறியது கூறலாயும் மயங்கவைத்தலாயும் முடியும் (செய். 129), தன்னான் ஒருபொருள் கருதிக்கூறலாக நிற்றலை ஓர்ந்துகொள்க (செய். 83).*** *இவ்வாறு உரையை மதிப்படும் ச. பாலசுந்தரனார் உரையாசிரியர்களின் உரைக்கொள்கையை அல்லது தொல்காப்பிய நூல்நெறியை விளங்கிக்கொள்ள சில சொற்றொடர்களைக் கையாண்டுள்ளார்.* ***அவர் கருத்து நூல்நெறிக்கு ஒவ்வாமையை விளக்கப்புகின் விரியுமாதலின் பின்வரும் உரைக்குறிப்புகளை நோக்கி உணர்ந்துகொள்க (மெய்ப். 12), அவர்தம் உரையும் விளக்கமும் பொருந்தாமையை விரிக்கின் பெருகும் ஆதலின் நல்லிலக்கணந்தேர் மாணாக்கர் மெய்ம்மையை ஆய்ந்து கொள்வார்களாக (செய். 101), இது கூறியது கூறலாகாமை அறிக (செய். 183).*** *இத்தொடர்களில் வந்துள்ள உணர்ந்துகொள்க, ஆய்ந்து கொள்வார்களாக, அறிக என்னும் சொல்லாடல்கள் மூல இலக்கண மரபை அறிவதற்கு அறிவுறுத்தும் சொல்லாடல்களாகும்.*

***முடிவுரை***

*உரைமறுப்பானது முதல் உரையாசிரியராக அறியப்படுகின்ற இளம்பூரணருக்கு முன்பே இருந்தமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒருசாராசிரியர், என்பாருமுளர், அறியார்*

அவர், ஆசிரியர் கருத்தென்க போன்ற சொற்றொடர்கள் இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்களின் உரைமறுப்புச் சொற்களாகச் சுட்டப்பட்டுள்ளன. பிறர் கருத்துக்களை ஏற்கும் ச. பாலசுந்தரனார் ஒருவர் கூறும் கருத்துக்கொண்டு மற்றொருவர் கருத்தை மறுத்துள்ளதையும் தாமே இலக்கியச் சான்றுகொண்டு பிறர் கருத்தை மறுத்துள்ளதையும் காணமுடிகின்றது. அவ்வாறு மறுக்கும் அவர் அவர்களின் உரைக்கருத்துக்களை வல்லுரை, வலிந்துரை, மயக்கவுரை, ஒவ்வாவுரை என்னும் சொற்களால் குறிக்கின்றார். ச. பாலசுந்தரனாரின் உரைமறுப்புக் கொள்கையைப் பொதுவகையில் மூன்றாகவும் சிறப்பு வகையால் ஏழாகவும் வகுத்துக்கொண்டு அவரின் உரைமறுப்பு உத்திகள் ஆராயப்பட்டுள்ளன. குன்றக்கூறல், மயங்கிக்கூறல், கூறியது கூறலாகாமை அறிக எனப் பிறர் உரையை மதிப்பிடுவதையும், ஆய்ந்துகொள்வார்களாக, உணர்ந்துகொள்க என இலக்கணம் கற்போருக்கு அறிவுறுத்தும் வெளியீடுகளாக வந்துள்ளமையும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**துணைநின்ற நூல்கள்**

*1. அரவிந்தன், மு.வை., (2012). உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600108, தமிழ்நாடு, இந்தியா.*

*2. இளம்பூரணர், (உ.ஆ.), (2011), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை – 600014, தமிழ்நாடு, இந்தியா.*

*3.நச்சினார்க்கினியர் (உ.ஆ.), (2007), தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும் முன்னைந்தியல்கள் பாகம் – ஒன்று கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவம், சென்னை – 600113, தமிழ்நாடு, இந்தியா.*

*4. பாலசுந்தரம், ச. (உ.ஆ.), (2012), தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி -3, பகுதி -1), பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636011, தமிழ்நாடு, இந்தியா.*

*5. பாலசுந்தரம், ச. (உ.ஆ.), (2012), தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி -3, பகுதி -2), பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636011, தமிழ்நாடு, இந்தியா.*

*6. பாலசுந்தரம், ச. (உ.ஆ.), (2012), தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி -3, பகுதி -2), பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636011, தமிழ்நாடு, இந்தியா.*

*7. பேராசிரியர், (உ.ஆ.), (2018) தொல்காப்பியம் – மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல், சாரதா பதிப்பகம், சென்னை – 600014, தமிழ்நாடு, இந்தியா.*

**இதழ்**

*1. வடிவேல்முருகன், கு., (2019), நச்சினார்க்கினியரின் உரை மறுப்பு நெறிகள், தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ். பகுதி VI. பதிப்பு 17, பக்க எண் 15-18, DOI: 3.458 (CIF), 3. 669 (IRJIF).*